திரு. என். பழனிவேல்; மாண்புமிகு தலைவர் அவர்களே, விதவைகளுக்கு வேலை வாய்ப்புகளில் முன்னுரை கொடுப்பதில் தகுதிகள் இருந்தால் தான் கொடுக்கப்படுகிறது. ஆகவே விதவைகளின் பிள்ளைகளுக்கு அந்த முன்னுரிமை கொடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, ஆதரவற்ற விதவைகளின் குழந்தைகள் படிக்கவேண்டுமென்றால் அரசாங்கம் இன்று புத்தகம் வாங்குவதற்காக உதவித் தொகை கொடுத்துக் கொண்டு இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் ஆதரவற்ற விதவைகளின் மகள் திருமணத்திற்கு ஆயிரம் ரூபாய் வீதம் ஆயிரம் பெண்களுக்கு உதவிட இன்று 10 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, திருமண ஏற்பாடுகளை அரசு செய்து வருகிறது.

திரு. மு. ப. முனுசாமி: தலைவர் அவர்களே, ஆதரவற்ற விதவைகள் பல்கலைக்கழகங்களில் படித்து பட்டம் பெறுகின்ற மாணவிகளுக்கும் முன்னுரிமை கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆதரவற்ற விதவைகளாக இருந்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதிலே தகுதி அடிப்படையிலே முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள்

வினா எண் 38—திரு. கே. ரமணி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் எவ்வளவு உள்ளன?

(ஆ) அவைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் எவ்வளவு பேர்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி; (அ) நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் 13. இவற்றில் இரண்டு தொழிற்சாலைகள் ஆரம்ப கட்டத்தில் இருக்கின்றன.

(ஆ) 1,161 தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த 13 தொழிற்சாலைகளில் இரண்டு தொழிற்சாலைகள் செயல்படவில்லை. ஆரம்ப நிலையில் இருப்பதாக குறிப்பிட்டார்

கள். இந்த தொழிற்சாலைகள் அத்தனைக்கும் சேர்த்து தொழிலாளர்கள் எண்ணிக்கையை அரசு எப்படி நிர்ணயித்தது இந்த அளவிற்கு தான் வேலை கொடுக்க வேண்டும் என்று நிர்ணயிப்புகளை ஏதாவது கமிட்டி மூலமாகவோ அல்லது தொழிற் சங்கங்களை கலந்தோ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13 தொழிற்சாலைகளில் இரண்டு தொழிற்சாலைகள் ஆரம்ப கட்டத்தில் இருப்பதாகச் சொன்னேன். அந்த இரண்டு தொழிற்சாலைகள் இப்போது அமைத்துக் கொண்டிருக்கிற பணியில் இருக்கின்றன. பதினோறு தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எப்படி தொழிலாளர்கள் எடுக்கப்பட்டார்கள் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. தகவலை மாண்புமிகு உறுப்பினருக்கு அனுப்பி வைக்கிறேன்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அவர்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்யக் கூடிய தொழிற்சாலை தொழிலாளர்கள் என்ற முறையில் அவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமும், மற்ற விதமான சலுகைகளும், தொழிற்சங்க தொழிலாளர்களுக்கான சலுகைகளும், மற்ற தொழிற்சாலைகளில் கொடுப்பதைப் போல இங்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொழிற்சாலைகளில் மற்ற தொழிற்சாலையில் இருப்பதை போல அங்கே பணிபுரிகிற தொழிலாளர்களுக்கு மினிமம் வேஜஸ் சட்டம் அமல் செய்யப்படுகிறது. மினிமம் வேஜஸ் என்ற வகையில் குறைந்தபட்ச கூலியாக 6 ரூபாய் சட்ட ரீதியாக கொடுக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் அவர்களுக்கு சீருடைகளும் மற்ற உரிமைகளும் வழங்கப்படுகிறது.

திரு. மு. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்குள்ள தனியார் தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குச் சுமார் ரூ. 12 அளவுக்கு அதிகமாக கூலியிருந்தும், அரசுக்குச்சொந்தமான இந்த கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு ரூ. 6 என்பது மிகவும் குறைவு. வேலை பளுவும் அதிகம். அதனால் அவர்களுடைய கூலிகளை உயர்த்துவதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே' நிபாதுவாக, தேயிலைத் தொழிற்சாலைகள் தற்போது மந்த உலைமையில் இருக்கிற காரணத்தால்' இன்றைய தினம் அவர்களுக்குக் குறைந்தபட்ச அளவுக்குச் கொடுக்கப் படுகிறது. விரைவில் இலாபம் பெறுகின்ற நேரத்திலே, உரியஅளவு ஊதியம் உயர்த்தப்படும்.

[1983 பிப்ரவரி 1]

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த நீலகிரி மாவட்டத்திலே உள்ள கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள், சிறு சிறு அளவில் தேயிலை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்காக ஆரம்பிக்கப்பட்டதாகும். அமைச்சர் அவர்கள் ரூ.6 குறைந்தப்பட்சக் கூலி என்று சொன்னார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கே குறைந்தபட்சக் கூலி ரூ. 7 என்று நிர்ணயித்திருக்கும்போது ஒரு பாக்டரியிலே வேலை பார்க்கிறவர்களுக்கு ரூ6தான் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சீரான நிர்வாகமும் இலாபமும் வந்தால், அது உயர்த்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது சீரான நிர்வாகமும் இல்லாமல், இலாபமும் இல்லாமல் இருப்பதற்கு காரணம், தொடர்ந்து, இந்த கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகளுக்குத் தேர்தல் வைக்காமலேயே, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பின் கீழே நிர்வாகம் இயங்காமல் இருப்பதுதான் என்று தெரிந்து, உடனடியாக அந்தத் தேயிலை தொழிற்சாலைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக அமைப்பை கூடிய சீக்கிரம் கொண்டு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்க நடவடிக்கை நிச்சயம் எடுக்கப்படும்.

விளாத்திக்குளம் தொகுதியில் பட்டுப்பூச்சி வளர்க்கும் சங்கம் அமைக்கும் திட்டம்

வினா எண் 84.— திரு. ரா. கு. பெருமாள்; மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் தொகுதியில் பட்டுப்பூச்சி வளர்க்கும் சங்கம் அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எந்த ஊரில் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:

(ஆ) ஆம் (அ) மற்றும்நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் தொகுதியில் பட்டுத் தொழில் செய்யும் விவசாயிகளின் கூட்டுறவு சங்கம் நாகலாபுரம் என்ற ஊரில் இவ்வாண்டுக்குள் ஆரம்பிக்கப்படும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இந்தப் பட்டுபூச்சி வளர்க்கும் சங்கம் தற்போது உற்சாகமாக இல்லை என்பது உண்மை. காரணம் என்னவென்றால், விற்பனைக்கு வருகின்ற அந்தப் பட்டுப்பூச்சிக்கான விலை போதுமானதாக, கட்டுப்படியாகக் கூடியதாக இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதை உயர்த்துவதற்கு, அந்த விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

TRUTH ALONE TRIUMPHS